Dinakaran / தினகரன்

10 NOV 2025

# புதுச்சேரி பல்கலையில் தேசிய ஊட்டச்சத்து மாத விழா

புதுச்சேரி, நவ. 10: புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் உணவியல் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை சார்பில் சரியான ஊட்டச்சத்து, ஆரோக்கியமான வாழ்க்கை என்ற தலைப்பில் தேசிய ஊட்டச்சத்து மாதம் மற்றும் உலக உணவு நாள் விழா கொண்டாடப்பட்டது.

இதையொட்டி, மாதம் முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டன. திறந்தவெளி அரங்கில் ஊட்டச்சத்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் ப்ளாஷ் மாப், புதுவை வாணி வானொலியில் சோளம் மற்றும் வாழ்க்கைமுறை, உணவு மற்றும் வேளாண் கழிவுகளின் மதிப்பூட்டல் என்ற தலைப்புகளில் ஜிங்கள்கள் மற்றும் உரையாடல்கள் ஒலிபரப்பப்பட்டன. அதிகஎடைக்கு எதிரான போராட்டம் என்ற தலைப்பில் கருத்து போட்டியும் நடத்தப்பட்டது. புதுச்சேரி கேந்திரிய வித்யாலயா-2 பள்ளியிலிருந்து 220க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் ஓவியம், கோஷம் எழுதுதல், வினாடி வினா போன்ற போட்டிகளில் பங்கேற்று ஊட்டச்சத்து கல்வி குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

இதன் தொடர்ச்சியாக, கடந்த 7ம் தேதி "ஒரு மரம் அம்மாவுக்காக" என்ற நிகழ்வு மரக்கன்றுகள் நடுதல் மூலம் நிறைவடைந்தது. இயக்குநர் தரணிகரசு, டீன் ஜோசப் செல்வின் ஆகியோர் மரக்கன்றுகளை நட்டனர். விழாவில் இயக்குநர் தரணிகரசு பேசுகையில், நிலைத்தன்மை மற்றும் சுற்றுச்சூழல் நட்பு உணவு முன்முயற்சிகளில் இளைஞர் ஊட்டச்சத்து நிபுணர்களின் பங்கைக் குறிப்பிட்டார். பேராசிரியர் நாராயணசாமி சங்கீதா வரவேற்றார். டாக்டர் சேகல் கீரண் நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தை விளக்கினார். உதவி பேராசிரியை சங்கமித்ரா நிகழ்ச்சி அறிக்கையை வழங்கினார்.

Dinakaran / தினகரன்

10 NOV 2025

### புதுச்சேரி பல்கலைக்கழகத்தில்

# பி.எச்.டி படிப்புக்கு 12ம் தேதி முதல் ஆன்லைனில் விண்ணப்பம் வரவேற்பு

**புதுச்சேரி, நவ. 10:** புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் பி.எச்.டி., படிப்புக்கான மாணவர் சேர்க்கைக்கு வரும் 12ம் தேதி முதல் ஆன்லைனில் விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக புதுச்சேரி பல்கலைக்கழக பதிவாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் பல்வேறு துறைகளில் உள்ள பி.எச்.டி படிப்புகளுக்கான இடங்கள் நுழைவுத்தேர்வில் பெற்ற மதிப்பெண் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளால் நடத்தப்படும் நேர்காணல் அடிப்படையில் நிரப்பப்படவுள்ளது. இதற்கு புதுச்சேரி பல்கலைக்கழகத்தினல் www.pondiuni.edu.in என்ற இணையதளத்தில் வருகிற 12ம் தேதி முதல் ஆன்லைன் பதிவு துவங்குகிறது. விண்ணப்பிக்க டிச.30ம் தேதி கடைசி நாளாகும். விண்ணப்பிக்கும்போது, அதில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளை கவனமாக பின்பற்ற வேண்டும்.

சம்பந்தப்பட்ட பாடத்தில் அல்லது அதனுடன் தொடர்புடைய பாடத்தில் முதுகலை பட்டப்படிப்புக்கு தகுதி பெற்றவர்கள் மற்றும் புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் அனைத்து பள்ளிகள், துறைகள், மனிதநேயம் மற்றும் சமூக அறிவியல், மேலாண்மை, வணிகம், அறிவியல், கல்வி, நுண்கலை மற்றும் மொழிகள் மற்றும் பிற துறைகளின் கீழ் சம்பந்தப்பட்ட பாடத்திற்கான விதிமுறைகளால் நிர்ணயிக்கப்பட்ட தகுதிகள் அல்லது பல்கலைக்கழகத்தால் சமமானதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டம் பெற்றவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். முதுகலை பட்டப்படிப்பில் 55% மதிப்பெண்கள் மற்றும் இறுதி ஆண்டு முதுகலை மாணவர்களும் விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள்.

பல்கலைக்கழகத் துறைகளில் முனைவர் பட்டப் படிப்புகளில் வழங்கப்படும் படிப்புகள், தகுதி மற்றும் இட ஒதுக்கீடு உள்ளிட்ட விவரங்களுக்கு, பல்கலைக்கழக இணையதளத்தில் உள்ள தகவல் சிற்றேட்டைப் பார்க்கவும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

Malai Malar/
மாலை மலர்

10 NOV 2025

புதுவை பல்கலைக்கழகத்தில்

# தேசிய ஊட்டச்சத்து மாத விழா

புதுச்சேரி, நவ.10—

புதுவை பல்கலைக் கழகத்தின் உணவியல் அறிவியல், தொழில் நுட்பத்துறை சார்பில் தேசிய ஊட்டச்சத்து மாதம், உலக உணவு நாள் விழா கொண்டாடப்பட்டது.

சரியான ஊட்டச்சத்து, ஆரோக்கியமான வாழ்க்கை என்ற தலைப்பில் மாதம் முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது. மாணவர்களின் ஓவியம், வினாடி—வினா, உரையாடல்கள் உட்பட பல நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. ஒரு மரம் அம்மாவுக்காக என்ற மரக்கன்று நடும் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இயக்குனர் தரணிக்கரசு, டீன் ஜோசப்செல்வின் ஆகியோர் மரக்கன்றுகளை நட்டனர். பேராசிரியர் நாராயணசாமி சங்கீதா வரவேற்றார். டாக்டர் சேகல்கீரண், உதவி பேராசிரியை சங்கமித்ரா ஆகியோர் நிகழ்ச்சி குறித்து விளக்கினர்.

Malai Malar / மாலை மலர்

10 NOV 2025

### புதுவை பல்கலைக்கழகத்தில்

# பி.எச்.டி. படிப்புக்கு விண்ணப்பம்

புதுச்சேரி, நவ.10—

புதுவை பல்கலைக்கழக பதிவாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:—

பல்வேறு துறைகளில் உள்ள பிஎச்டி படிப்புகள், நுழைவுத்தேர்வு மதிப்பெண், நேர்காணல் அடிப்படையில் நிரப்பப்பட உள்ளது. புதுவை பல்கலைக்கழக இணையதளத்தில் வருகிற 12—ந் தேதி முதல் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். டிசம்பர் 30—ந் தேதி கடைசிநாள். விண்ணப்பத்துடன் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகள், சிற்றேடை மாணவர்கள் பின்பற்ற வேண்டும். இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.